**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 28.10.2025**

**O.S.No.256/2007**

**வழக்கு சாட்சி DW.1–தனசேகரன் , த/பெ. பழனிச்சாமி**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

ராஜேஸ்வரி, தனபாக்கியம் எனது உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாவா சொத்தானது எனக்கு மற்றும் எனது சகோதரிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்து என்றால் சரியல்ல . தாவா சொத்து எனது தந்தையின் சுயசம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து என்றால் அதுகுறித்து எனக்கு சரியாக தெரியாது, எனது அப்பா பெயரில் இருந்தது . எதன் அடிப்படையில் தாவா சொத்து எனது அப்பாவிற்கு கிடைக்கபெற்றது என்றால் எனது அப்பாவின் அப்பாவான எனது தாத்தாவிடமிருந்து எனது அப்பா கிரையம் வாங்கினார்.

எனது அப்பா பெயரில் உள்ள கிரைய ஆவணம் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனது அப்பா கிரையம் வாங்கியதாக சொல்லி தெரியும் , ஆவணங்களையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவிற்கு சுயாஜியதமாக பாத்தியப்பட்டதன் அடிப்படையில் தான் எனக்கு தாவா சொத்தின் மீது எனக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு தாவா சொத்தில் முழு உரிமை இல்லை என்றால் எனக்கு உயில் எழுதி வைக்க அவருக்கு எந்தவொரு உரிமையும் ஏற்படாது என்றால் எனது அப்பாவிற்கு முழு உரிமை உள்ளது.

தாவா சொத்து எங்கள் குடும்ப பூர்விக பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அதில் வாதிகளுக்கும், எனக்கும் ஆளுக்கு மூன்றில் ஒரு பங்கு உரிமை உள்ளது என்றாலும் , அதை மறுக்கவேண்டி

நானும், எனது தந்தையும் மோசடியாக உயில் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . உயில் சாசனத்தில் தோட்டம், வீடு , வயல்காடு, எனது அம்மா பெயரில் உள்ள வீட்டினை எனது அக்கா தனப்பாக்கியம் காலம் வரை அவர் அனுபவிக்கவும், அவர் காலத்திற்கு பிறகு அந்த சொத்து எனக்கு என்றும் உயில் எழுதி வைக்கப்பட்டுள்ளது . எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து எனது அப்பா எழுதி வைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல , அதுகுறித்த விபரங்கள் எனக்கு தெரியாது. எனது அக்கா தனப்பாக்கியம் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான் , அவர் ஊனமுற்ற நபர் என்றால் சரிதான். தனப்பாக்கியமும், ராஜேஸ்வரியும் என்னிடம் சொத்து கேட்டு நான் கொடுக்கவில்லை என்று சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் , ஆனால் தனப்பாக்கியம் சொத்தை கேட்கவில்லை.

தனப்பாக்கியமும் என்னிடம் சொத்தை பிரித்துக்கொடுக்க சொல்லி கேட்டார் என்றாலும் , நான் கொடுக்க மறுத்ததால்தான் இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . திருப்பூர் வாவிபாளையத்தில் 30 வருடங்களாக குடியிருந்து வருகிறேன் . ராஜேஸ்வரியின் கணவரான சோமசுந்தரம் பண்ணைக்காட்டை சேர்ந்தவர் என்றால் சரிதான் . தனப்பாக்கியம் பண்ணைக்காட்டில் வெகுநாட்கள் உடல்நிலை சரியல்லாமல் இருந்து பண்ணைக்காட்டில் ராஜேஸ்வரி வீட்டில் இறந்துவிட்டார் என்றால் சரிதான் , ஆனால் தனப்பாக்கியம் ரொம்ப நாட்கள் இல்லை, கொஞ்ச நாட்கள்தான் இருந்தார்.

தனப்பாக்கியம் உடல் ஊனமுற்றவர் என்பதால் எந்த காலத்திலும் நான் அவரை கவனித்துக்கொள்ளவில்லை என்றாலும், ராஜேஸ்வரிதான் அவரை கவனித்து வந்தார் என்றால் சரியல்ல. தனப்பாக்கியத்தை ராஜேஸ்வரி கவனித்து வந்த காரணத்தால் தனப்பாக்கியம் ராஜேஸ்வரி பெயரில் உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் (சாட்சி வாதி தரப்பு வழக்கறிஞரை பார்த்து நீங்கள் தான் அழைத்துச்சென்று எழுத வைத்தீர்கள்

என்று தெரிவித்தார்). உயில் சாசனத்தின்படி தனப்பாக்கியத்தின் பங்கானது ராஜேஸ்வரிக்குதான் சேர வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக மூன்றில் இரண்டு பங்கு ராஜேஸ்வரிக்கும், 1 பங்கு எனக்கும் சேர வேண்டியது என்றால் சரியல்ல.

தாவா சொத்து அனைத்தும் எங்களது கூட்டு அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல . தாவா சொத்தினை அபகரிக்க வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனது எதிருரையில் சொல்லியுள்ள உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல . தனப்பாக்கியத்தின் வாழ்வாதாரத்திற்கு நான் எதுவும் பணம் கொடுத்து உதவியுள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன் . பணம் கொடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் முன்னிலை படுத்தியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அதற்கு சாட்சியாக ஒரு நபர் மட்டும் உள்ளார்.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.10.28 16:56:52 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.